அமலாக்கத் துறையை ஏவிவிடும் பா.ஜ.க. அரசு!

‘இந்தியா’ கூட்டணியை வெற்றி பெறச் செய்வதுதான் இதற்கான தீர்வு!

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, நவ. 6 - வெற்றி பெற்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களை விலைக்கு வாங்குவது அல்லது அவர்கள்மீது அமலாக்கத் துறையை ஏவிவிடுவது என்பதுதான் உண்மையான ஜனநாயகமா? வரும் 2024 தேர்தலில் ‘இந்தியா’ கூட்டணியை வெற்றி பெறச் செய்வதுதான் இதற்கு ஒரே தீர்வு என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

ஜனநாயகத்தில் ஆளுங்கட்சிக்கு எவ்வளவு முக்கியமோ அதே அளவுக்கு அல்லதுஅதற்கடுத்தநிலையிலோ மதிக்கப்படவேண்டியவை எதிர்க்கட்சிகள் ஆகும்.

பார்லிமெண்டரி ஜனநாயகத்தின் எடுத்துக்காட்டாகக் காட்டப்படும் நாடு பிரிட்டன்; பிரிட்டிஷ் பார்லிமெண்டரி முறையின் முக்கிய கூறுபாடான கேபினெட் சிஸ்டம் (Cabinet System)என்ற முறையைத்தான் நமது அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கிய மேதைகள் பின்பற்றி அமைத்துள்ளனர்.

இது அமெரிக்கா போன்ற அதிபர் ஆட்சி (Presidential System) முறை கிடையாது.

பிரிட்டனில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் “விசுவாசமுள்ள எதிர்க்கட்சித் தலைவர்” “His Majesty’s Loyal Opposition Leader” என்றே அழைக்கப்படுகிறார்.

நியாயமான தேர்தல்மூலமே தோற்கடித்து பதவிக்கு வரவே முயலுவர் எதிர்க்கட்சிகளைப் பழிவாங்கும் உணர்வு முறை ஆளுங்கட்சிக்கு இல்லாமல், நியாயமான தேர்தல்மூலமே தோற்கடித்து பதவிக்கு வரவே முயலுவர்.

பெரும்பாலும் வெற்றி பெற்ற கட்சியினரை விலைக்கு வாங்குதல், பேரம் பேசுதல் போன்ற ‘அரசியல் அசூசைகளை’ அவர்கள் கையாளுவதில்லை.

ஆனால், இங்கேதான் “ஆயாராம் காயாராம்” என்ற கட்சித் தாவல், வெற்றி பெற்றவர்களை விலைக்கு வாங்கும் கேவலம் வேர் கொண்டுள்ளது. பா.ஜ.க.வின் கடந்த 9 ஆண்டு கால ஆட்சியில் உச்சத்திற்குச் சென்றுள்ள இந்த அரசியல் அவலம் தொடர்கதையாக உள்ளது!

வருமான வரித் துறை சி.பி.அய். அமலாக்கத் துறை ஆகியவற்றை அரசியல் ஏவுகணைகளாக்கி வருகின்றனர்!

அதுபோலவே, அப்படி மசியாது, கொள்கை வழியில் கட்சித் தாவலுக்குத் தயங்குபவர்களுக்கோ இடந்தராது, ஆளும் பா.ஜ.க. ஆர்.எஸ்.எஸ். அரசை எதிர்த்தால் உடனடியாக அவர்களைத் தங்களது ‘அரசியல் திரிசூலமான’ வருமான வரித் துறை சி.பி.அய். அமலாக்கத் துறை ஆகியவற்றை அரசியல் ஏவுகணைகளாக்கி, திடீர் சோதனை, வழக்குகள், கைதுகள்மூலம் அரசியல் பழிவாங்குவது தொடர் கதையாகி வருகிறது!

புதுச்சேரியில் அமைந்த என்.ஆர்.காங்கிரஸ் பா.ஜ.க. கூட்டணி அரசு எப்படி முந்தைய காங்கிரஸ் கட்சியினரை மாற்றி, அரசு அமைத்தது என்பது அனைவரும் அறிந்த ஒன்று!

2024 பொதுத்தேர்தல் நெருங்குகிறது என்கிற நிலையில், தமிழ்நாட்டில் ‘திராவிட மாடல்’ ஆட்சி, அதன் ஒப்பற்ற முதலமைச்சர் ‘சமூகநீதிக்கான சரித்திர நாயகர்’ மு.க.ஸ்டாலின் அவர்களது அமைச்சரவை அமைச்சர்கள், முக்கிய எம்.பி.,க்கள் போன்றவர்களைக் குறிவைத்து இப்படி சோதனை, வழக்குகள், ரெய்டுகள் பாய்வதுபற்றி மக்கள் புரிந்து கொண்டுள்ளனர்.

மக்கள் மத்தியில் தி.மு.க.விற்கு அவப்பெயரை உண்டாக்கவே!

சில ஏடுகள் ‘கோயபல்ஸ்’ பாணியையே பின்பற்றி, உண்மைக்கு மாறான ஊதிப் பெருக்கப்பட்ட செய்திகளைப் பரப்புதல், பா.ஜ.க. தலைவர்கள் அவற்றைப்பற்றிப் பேசுவது எல்லாம் அரசியல் காழ்ப்புணர்வுவோடு, மக்களுக்குக் கொள்கை அடிப்படையிலான நலத் திட்டங்களைச் செயற்படுத்தி அதன்மூலம் தங்களது ஆட்சிக்கு ஆதரவு பெறாமல், ‘இந்தியா’ கூட்டணிக்குத் தி.மு.க.தான் வழிகாட்டியாக, மூலவராக நமது முதலமைச் சர்தான் இருக்கிறார் என்பதால், அவரது அமைச்சர்களுக்கு மக்கள் மத்தியில் ஓர் அவப்பெயரை உண்டாக்கவே இந்த முறை தொடர்ந்து பின் ன்பற்றப்படுகிறது. இம்மாதம் நடைபெறும் 5 மாநிலத் தேர்தல்களில் எதிர்க்கட்சி முதலமைச்சர்கள் என்பதால், அவர்கள்மீது இந்த ‘திரிசூலங்கள்’ பாய்ச்சப்பட்டு இருக்கின்றன.

ராஜஸ்தான் முதல மைச்சர் மகன்மீது சட்டீஸ்கர் முதலமைச்சர் பூபேஷ் பாகல்மீது டில்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால்மீது இப்படி ஒரு நெருக்கடி, கைது மிரட்டல்கள் தொடரும் நிலை!

தமிழ்நாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள்மீது இப்படி மிரட்டல்கள் நடக்கின்றன.

சட்டம் தன் கடமையைச் செய்வதில் யாருக்கும் தடை இல்லை. ஆனால், அவை அபாண்டமாக இருப்பதுதான் கண்டிக்கத்தக்கது.

தி.மு.க. எம்.பி., ஜெகத்ரட்சகன் வீடு, அவர் நடத்தும் கல்வி நிறுவனங்களில் சோதனை, தமிழ்நாடு அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் நடத்தும் கல்வி நிறுவனங்களில் சோதனை போன்ற செய்திகள்.

2ஜி வழக்கில் ஆதாரங்களைத் தர முடிந்ததா?

அதுபோலவே, ஆ.இராசா அவர்கள்மீது முன்பு 2ஜி வழக்கில் எத்தனையோ பூஜ்ஜியங்களைப் போட்டு 1.75 லட்சம் கோடி ரூபாய் இழப்பு என்று தொடுத்த வழக்கு என்னாயிற்று? ஆதாரங்களைத் தர முடிந்ததா?

மாறாக, இன்றைய ஒன்றிய ஆட்சியான பா.ஜ.க. ஆர்.எஸ்.எஸ். ஆட்சியில் ஏழரை லட்சம் கோடி ரூபாய் ஊழல் நடந்துள்ளதைச் சுட்டிக்காட்டி சி.ஏ.ஜி. அறிக்கை கொடுத்தது. இதன்மீது “ஊழலை ஒழிக்க வந்த உத்தமர்கள்” ஆட்சி என்ன நடவடிக்கை எடுத்தது?

சில அதிகாரிகளை மாற்றினால், ஊழல் நிவர்த்தியா கிவிட்டதாக அர்த்தமா?

மக்கள்தான் இறுதித் தீர்ப்பை ஜனநாயகத்தில் தேர்தல்மூலம் அளிப்பவர்கள் அவர்கள் உன்னிப்பாக கவனித்து வருகிறார்கள்!

தேர்தல் நிதி பெறுவதில் ஒரு சார்பு வாய்ப்புப்பற்றி ஆளுங்கட்சிக்குள்ள தகவல் தெரிந்துகொள்ளும் அவ்வாய்ப்பு மற்ற எதிர்க்கட்சிகளுக்கு இல்லையே! அதையும் அவர்களுக்குத் தருவது ஒன்றே நியாயமான வெளிப்படையான தன்மை என்று உச்சநீதிமன்றம் சொல்லியிருக்கிறதே!

“அரசியல் பிழைத்தோருக்கு நிச்சயம் அறங்கூற்றமாகும்” என்பது உண்மை!

அதை மக்கள் தேர்தல் முடிவுகள்மூலம் நிரூபிப்பார்கள்.

‘இந்தியா’ கூட்டணி இத்தகைய ஜனநாயக அவலங்களை முறியடிக்கும்!

ஆளுங்கட்சியின் அதிகார துஷ்பிரயோகம், பண பலம், புஜபலம், பத்திரிகைகள் பலம் எல்லாம் தாண்டி, மக்கள் பலம்மூலம் ‘இந்தியா’ கூட்டணி இத்தகைய ஜனநாயக அவலங்களை முறியடிக்கும்.

எதிர்க்கட்சித் தலைவர்களைத் தாண்டி, மக்கள் அதற்கு ஆயத்தமாகிவிட்டார்கள் என்பதை 5 மாநிலத் தேர்தல் முடிவுகள் நிச்சயம் உணர்த்தும்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கையில் தெரிவித்து ள்ளார்.

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண் தம்புராஜ் முன்னிலையில் கடலூர் தேவனாம்பட்டினம் வெள்ளி கடற்கரையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் வாயிலாக ‘நடப்போம் நலம்பெறுவோம் நடைப்பயிற்சியை துவக்கிவைத்து பங்கேற்றனர். இந்நிகழ்ச்சியில் கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா.இராஜாராம் கடலூர் மாநகர மேயர் திருமதி.சுந்தரிராஜா மாநகர துணைமேயர் பா.தாமரைச்செல்வன் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் சுகாதாரத் துறை, வருவாய்த் துறை, காவல் துறை, பொதுப்பணித் துறை, தோட்டக்கலைத் துறை, வனத்துறை, மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் நெடுஞ்சாலைத் துறை உள்ளிட்ட பல்வேறு துறை அலுவலர்கள் நடைப்பயில்வோர் சங்க உறுப்பினர்கள் மற்றும் பெருந்திரளான பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்தில்

இளைஞர் அணி நிர்வாகிகளுக்கான நேர்காணல்!

அமைச்சர் மனோ தங்கராஜ் - மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் பங்கேற்பு!

குமரி,நவ.6 - கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, நேற்று (05.11.2023 - ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணிக்கு நாகர்கோவில், ஒழுகினசேரியில் அமைந்துள்ள மாவட்ட தலைமைக் கழக அலுவலகத்தில் வைத்து ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர் ஆகிய பொறுப்புகளுக்கான நேர்காணல் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் தலைமையில், நாகர்கோவில் மாநகர செயலாளர் ப. ஆனந்த், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வி. அகஸ்தீசன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக பால்வளத்துறை அமைச்சர் த. மனோ தங்கராஜ், கழக இளைஞர் அணி மாநில துணை செயலாளர்கள் இன்பா ஏ.என். ரகு, பி. அப்துல் மாலிக், என். இளையராஜா, கே.ஈ. பிரகாஷ், பி. எஸ். சீனிவாசன், ஜி.பி. ராஜா, கே. பிரபு கஜேந்திரன், சி. ஆனந்தகுமார் ஆகியோர் கலந்து கொண்டு விண்ணப்பித்தவர்களுக்கு தனித்தனியே நேர்காணல் நடத்தினர். நாகர்கோவில் மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் சி.டி. சுரேஷ், மாவட்ட, மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் மற்றும் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் பலர் பங்கேற்றனர்.

திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதி தி.மு.க. சார்பில்

‘நீட் விலக்கு நம் இலக்கு’ கையெழுத்து இயக்கம்!

கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்! கே.பி.சொக்கலிங்கம் - வீ.ராமநாதன் பங்கேற்பு!

சென்னை, நவ.6- தமிழ்நாட்டு மாணவர்களின் மருத்துவக் கனவை படுகொலை செய்யும் நீட் தேர்வை கண்டித்து கழகத் தலைவர் தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கழக இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் முன்னெடுப்பில் திருவொற்றியூர் தொகுதி தி.மு.க. சார்பில் நடைபெற்ற ‘நீட் விலக்கு நம் இலக்கு’ எனும் மாபெரும் கையெழுத்து இயக்கம் திருவொற்றியூர் விம்கோ நகரில் 5வது வட்டக் கழகச் செயலாளரும், மாமன்ற உறுப்பினருமான கே.பி. சொக்கலிங்கம் வரவேற்பில் கழக தலைமை செயற்குழு உறுப்பினர் வி.ராமநாதன் முன்னிலையில் மாநில மீனவரணி துணைத் தலைவர் திருவெற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.பி. சங்கர் துவங்கி வைத்தார்.

சிறப்பு அழைப்பாளர்களாக வட சென்னை காங்கிரஸ் மாவட்ட தலைவர், 4-வது வட்ட மாமன்ற உறுப்பினர் சாமுவேல் திரவியம், 22-வது வட்ட மாமன்ற உறுப்பினர் தீர்த்தி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தோழர் 4 வது வட்ட மாமன்ற உறுப்பினர் ஆர். ஜெயராமன், மதிமுக நகர செயலாளர் ரகுநாதன், திராவிடர்_ கழக மாவட்ட செயலாளர் வே.மோ.மோகன், நகர செயலாளர் இராஜேந்திரன், விடுதலை சிறுத்தைகள் கட்சி நகர செயலாளர் ஜான் அலெக்ஸ், தமிழர்_ பாரதம் நிறுவனர் தேவராஜ், காங்கிரஸ் நகர தலைவர் கே.பி.துரை, சுகுமாறன், அரவிந்த் ஆறுமுகம், கழக பொதுக் குழு உறுப்பினர் இரா.முருகேசன், எம்.எஸ்.நாகலிங்கம், இ.ரமேஷ், பிரபாவதி, மாமன்ற உறுப்பினர்கள் கவி.கணேசன், கோமதி சந்தோஷ்குமார், வட்ட கழக செயலாளர்கள் ஏகா. கார்த்திகேயன், மு.மாணிக்கவேலன், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் எஸ்.டி. சங்கர், ஆர்.டி.மதன்குமார், டி.ஜி.ஆர்.மணிவண்ணன், எம்.எம்.செந்தில், கு.தமிழ்மணி, பாலஉமாபதி, எம். கார்த்திக், தேசப்பன், தேச முத்து, பிரட்சுரேஷ், தச.எழிலன், ஜாக் கண்ணன், ஜெகன், டைட்டஸ், மாவட்ட பிரதிநிதிகள் கே.கார்த்திகேயன், பி.எஸ். சைலஸ், தினேஷ் குமார், எஸ். மகேந்திரன், குட்டி (எ) எத்திராஜ், சந்தான கிருஷ்ணன், மலைராஜ், ரமேஷ், கலை.சரவணன், வி.கே.ஏழுமலை, பண்ணை சந்திரசேகர், புழல் ஜெகதீசன், கொசப்பூர் ரவிச்சந்திரன், கே.தேசிங்கு, கலைஞர் நகர் பாபு, தலைமை கழக பேச்சாளர்கள் எழும்பூர் கோபிநாத், வாசு.கருணாநிதி, டைலர் மணி, கவிஞர் மகிழன், எஸ்.கே.இளங்கோ, எம்.எஸ்.ரவி, எஸ்.செல்வம், ஆர். குமரன், ஆர்.பாலச்சந்தர், எஸ்.முகுந்தகுமார், ராதா தங்கவேல், புனிதா, ஹேமலதா, சந்திரலேகா, அனிதா, மு.வசந்தராஜ், தேவராஜ், முத்துராஜ் கே.எஸ்.ஆனந்தன், ஜெ.கருணாநிதி, இளங்கோ, எஸ். விஜயராகவன், கே. முனுசாமி, ராம்ராஜ், பரணி குமார், இரா.கணேசன், தாடி கார்த்திக், எம்.எஸ்.பிரபாகரன், வேலுமணி, அருண்குமார், சங்கர், தொ.மு.ச. ராஜவேல், சண்முகம், லோகு,

5-வது வட்ட நிர்வாகிகள் வே.கோபால், கே.ரமேஷ், ஜி.கஜேந்திரன், யூ.சார்லஸ், சே.பாபு, முத்து கருப்பன், பாரூக், பஞ்சாட்சரம், ஆர். எம் செல்வம், மனோகரன், எம்.ஜோதி, கோவிந்தசாமி, பகுதி சரவணன், சிங்காரம் ரவி, வசந்தகுமார், அன்புச் செல்வன், ஆரிட் , சங்கர், தீனதயாளன், பிரவீன் ராஜ், முத்து, அயத் பாஷா, அந்தோணி மதுரை முத்து, பிரசாந்த், சுப்பிரமணி, கதிரேசன், நடராஜ் சரவணன், பாலு , ஜெயராவ், ரவிக்குமார், சத்யா, இளங்கோ, முன்னாள் பகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் அ.தமிழ் இன்பன் மற்றும் கழக தோழர்கள், நிர்வாகிகள், பொதுமக்கள், பெற்றோர்கள் திரளாக கலந்து கொண்டு கையெழுத்து இயக்கத்தில் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு மாணவர்களின் மருத்துவ கனவை படுகொலை செய்யும் நீட் தேர்வை கண்டித்து கழகத் தலைவர் தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கழக இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் முன்னெடுப்பில் திருவொற்றியூர் தொகுதி தி.மு.க. சார்பில் நடைபெற்ற ‘நீட் விலக்கு நம் இலக்கு’ எனும் மாபெரும் கையெழுத்து இயக்கம் திருவொற்றியூர் விம்கோ நகரில் 5வது வட்டக் கழகச் செயலாள கே.பி.சொக்கலிங்கம் எம்.சி. வரவேற்பில் கழக தலைமை செயற்குழு உறுப்பினர் வி.ராமநாதன் முன்னிலையில் மாநில மீனவரணி துணைத் தலைவர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. துவங்கி வைத்தார். இதில் அனைத்துக் கட்சி நிர்வாகிகள், கழகத் தோழர்கள், பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இராயபுரம் – பிரகாசம் சாலையில் அமைக்கப்பட்ட

ரூ. 5.55 கோடி மதிப்பில் மழைநீர் வடிகால்வாய்!

சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.ராதாகிருஷ்ணன் ஆய்வு!

சென்னை,நவ. 6- சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ், பெருநகர சென்னை மாநகராட்சி,

இராயபுரம் மண்டலத்திற்குட்பட்ட பிரகாசம் சாலையில் ரூ.5.55 கோடி மதிப்பீட்டில் 1.11 கி.மீ. நீளத்தில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள மழைநீர் வடிகால்வாயினை கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், நேற்று (05.11.2023) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் ஆணையாளர் ஜெ.ராதாகிருஷ்ணன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வடகிழக்குப் பருவமழை தொடங்கி பரவலாக பெய்து வருகிறது. ஏற்கனவே ஜூன் மாதம் 19 ஆம் தேதி முதல்100 நாட்களில் தென்மேற்குப் பருவமழை மூன்றில் இரண்டு பங்கு நாட்கள் மழைபெய்தது.

இது இயல்பைவிட 75 சதவீதம் அதிகமாகும். வடகிழக்குப் பருவமழையினைப் பொறுத்த வரையில், அக்டோபர் மாதத்தில் குறைவாகப் பெய்துள்ளது. 426 சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்ட சென்னை மாநகராட்சியில் 35 ஆயிரம் சாலைகள் உள்ளன 11 ஆயிரம் மழைநீர் வடிகால்கள் உள்ளன தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவின்படி 2021 ஆம் ஆண்டுக்குப் பிறகு வல்லுனர் குழுவின் பரிந்துரைப்படி புதிதாக 876 கிலோ மீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடிகால்கள் அமைக்கப்பட்டன. இதன் காரணமாக கடந்த மூன்று நாட்களாகப் பெய்த மழையினால் குறிப்பாக புழல், ஆலந்தூர், அடையாறு ஆகிய பகுதிகளில் பெரியலாவில் மழைப் பொழிவு ஏற்பட்டாலும் பெரும்பாலான இடங்களில் மழைநீர் தேங்கவில்லை ஒரு சில இடங்களில் மட்டும் தேங்கிய மழைநீரும் சில மணி நேரங்களில் வடிந்துவிட்டது. நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் தெரிவித்தபடி எந்தப் பகுதிகளிலும் தண்ணீர் நிற்காமலும், ஒரு சில தாழ்வான பகுதிகளில் நிற்கும் மழைநீரும் ஒரு மணி நேரத்திலும் வடிந்து விடுகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொலைபேசியின் வாயிலாகத் தொடர்பு கொண்டு சென்னையில் மழை குறித்தும் அதன் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் கேட்டறிந்து உரிய ஆலோசனைகளை வழங்கி வருகிறார்கள் பெருநகர சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரை ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு அறையின் வாயிலாக 24 மணி நேரமும் மழை தொடர்பாக கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், மழை தொடர்பாக மக்களிடமிருந்து வரும் புகார்கள் மீது உரிய நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சில பேருந்து நிலையங்கள் தாழ்வாக அமைந்துள்ளன அந்த இடங்களிலும் மோட்டார் பம்புகள் அமைத்து மழை நீர் அகற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாநகராட்சி மற்றும் நீர்வளத்துறை, நெடுஞ்சாலைத் துறை, சென்னை குடிநீர் வாரியம், சென்னை மெட்ரோ இரயில், மின்துறை, இரயில்வே துறை உள்ளிட்ட பல்வேறு சேவைத் துறைகளுடன் ஒருங்கிணைந்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு ஒவ்வொரு வாரமும் ஒருங்கிணைப்பு கூட்டம் நடத்தப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இது போன்று பன்முக நடவடிக்கைகள் பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் மேற்கொள்ளப்பட்டு மழைக்காலப் பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகிறது. மழைநீர் சேகரிக்கும் நடவடிக்கைகளும் மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 186 குளங்கள் கண்டறியப்பட்டு அவற்றில் 117 குளங்கள் தூர்வாரப்பட்டுள்ளது. மேலும் 15 கோவில் குளங்கள் தூர்வரப்பட்டுள்ளது மேலும் மழைநீர் சேகரிக்கும் அமைப்புகள், மழைநீர் வடிகால்களில் மழை நீர் சேகரிப்புக்கான பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், மாநகராட்சியில் உள்ள பூங்காக்களில் ஸ்பான்ச் பார்க் அமைத்து மழைநீர் சேமிக்கப்படுகிறது. டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

பெருநகர சென்னை மாநகராட்சியில் வடகிழக்குப் பருவ மழையினை முன்னிட்டு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் விழிப்புணர்வோடு களப்பணியாற்றி வருகிறார்கள்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, கூடுதல் ஆணையர் (வருவாய் (ம) நிதி) திருமதி ஆர்.லலிதா, , இணை ஆணையர் (பணிகள்) டாக்டர் ஜி.எஸ்.சமீரன், வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, தலைமைப் பொறியாளர் (பொது) எஸ்.ராஜேந்திரன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ், பெருநகர சென்னை மாநகராட்சி, இராயபுரம் மண்டலத்திற்குட்பட்ட பிரகாசம் சாலையில் ரூ.5.55 கோடி மதிப்பீட்டில் 1.11 கி.மீ. நீளத்தில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள மழைநீர் வடிகால் பணியினை கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், நேற்று (05.11.2023) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, கூடுதல் ஆணையர் (வருவாய் (ம) நிதி) திருமதி ஆர்.லலிதா, இணை ஆணையர் (பணிகள்) டாக்டர் ஜி.எஸ்.சமீரன், வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, தலைமைப் பொறியாளர் (பொது) எஸ்.ராஜேந்திரன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.